## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2024 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 08-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண். 774 /2015

வா.சா.1 **செல்வராஜ்**

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி:-**

நான் என்ன வழக்கு யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை வழக்கை என் மாமன் பிள்ளைகளுக்கெதிராக தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் நான் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் எனக்கு எவ்வாறு உரிமை வருகீறது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும் அம்மா வழியில் எனக்கு உரிமை உள்ளது. 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 6 முதல் 13 பிரதிவாதிகள் எதற்காக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் அவர்களுக்கும் பங்கு இருப்பதாக சொன்னதால் தரப்பினராக சேர்த்துள்ளேன். முதலில் எல்லோரும் ஒற்றுமையாகத்தான் இருந்தோம். 6 முதல் 13 பிரதிவாதிகளுடனும் சகஜமாகத்தான் இருந்து வருகிறேன். எனக்கு பங்கு இல்லை என்று சொன்னதால் இந்த வழக்குத் தாக்கல் செய்துள்ளேன். எத்தனை ஏக்கர் பூமிக்கு வழக்குத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 ஏக்கர் பூமிக்கு வழக்குத் தாக்கல் செய்துள்ளேன். 3 ஏக்கர்பூமிக்கும் என்ன சர்வே எண் என்ற விவரம் தெரியாது. தாவா சொத்தின் பட்டா சிட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அப்புச்சி பெயரில் உள்ளது. தற்போது 2024 ம் வருடம் யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. தற்போது தாவா சொத்து சம்பந்தமாக பத்திரம் யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. என் அப்புச்சி ராமசாமிக் கவுண்டருக்கு தாவா சொத்து தவிர வேறு பூமி பாத்தியப்பட்டு இருந்ததா என்றால் தாவா சொத்து மட்டும் தான் பாத்தியப்பட்டு இருந்தது. எங்கள் அப்புச்சி ராமசாமிக் கவுண்டருக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியம் என்றால் கிரையப் பத்திரத்தின் படி பாத்தியமாகும். அந்தக் கிரையப் பத்திரத்தைப் பார்த்துள்ளேன். எனது தரப்பில் என் அப்புச்சி பெயரில் உள்ள கிரையப் பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2 முதல் 5 பிரதிவாதிகளுக்குள் என்ன வழக்கு தாக்க்ல் செய்துகொண்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவர்களுக்குள் பாகப்பிரிவினை செய்து

கொண்டால் அது செல்லும் என்றால் செல்லாது. எங்களுக்கும் பங்கு இருப்பதால் அந்த ஆவணம் செல்லாது. இந்த வழக்கை பாகம் கேட்டு தான் தாக்கல் செய்துள்ளேன்

ராமசாமிக் கவுண்டருக்கு தாவா சொத்துக்களைத் தவிர வேறு சொத்துக்களும் இருப்பதாக 2 முதல் 5 பிரதிவாதிகள் எதிர்வாதத்தில் சொல்லியுள்ளார்கள் என்றால் ராமசாமிக் கவுண்டருக்கு தாவா சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்கள் இல்லை. ராமசாமிக் கவுண்டருக்கு 8ம் பிரதிவாதி வாரிசு இல்லை என்றால் சரிதான். 5 முதல் 7 மற்றும் 9 முதல் 13 பிரதிவாதிகள் ராமசாமிக் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சில சொத்துககளை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. ராமசாமிக் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட இன்னும் சில சொத்துக்களை 5 முதல்7 மற்றும் 9 முதல் 13 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனக்கு ராமசாமிக் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எந்தெந்த காலத்தில் அமைந்துள்ளது என்ற விவரம் தெரியாது என்றால் சரியல்ல. பெருமாபாளையத்தில் ராமசாமிக் கவுண்டருக்குப் பாத்தியப்பட்ட சொத்து உள்ளது. பெருமாபாளையத்தில் தாவா சொத்து உள்ளது. 5 முதல்7 மற்றும் 9 முதல் 13 பிரதிவாதிகள் ராமசாமிக் கவுண்டருக்குப் பாத்தியப்பட்ட சில சொத்துக்களை தனிப்பட்ட வகையில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் ராமசாமிக் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சில சொத்துக்களை அனுபவித்து வரும் விவரம் தெரியும் என்றும் அதைத் தெரிந்து கொண்டு அந்தச் சொத்துக்களை வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 5 பிரதிவாதிகள் அவர்களுக்கு தனிப்பட்ட வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து தான் பாகப்பரிவினை செய்து கொண்டார்கள் எனவும் அந்தச் சொத்தில் எனக்கு எவ்வித பங்கு பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. 5 முதல் 7 மற்றும் 9 முதல் 13 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவர்களுக்குள் பாகப்பிரிவினை செய்துகொண்டதால் தான் அவர்கள் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 5 பிரதிவாதிகள் பாகப்பிரிவினை செய்துகொண்ட விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும் , எப்போது தெரிந்துகொண்டேன் என்றால் 13 வருடங்களுக்கு முன்பாக தெரிந்து கொண்டேன். எங்களுக்கு பங்கு இல்லை என்று பத்திரப் பதிவு அலுவலகம் சென்று பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள். அந்த விவரம் பின்னர் தான் தெரிய வந்தது. 2 முதல் 5 பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினைப் பத்திரம் செல்லாது என்று கேட்டு தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்,

என் தாயார் பெயர் சரசாயம்மாள் ஆகும்,அவர் 2001 ம் வருடம் இறந்துவிட்டார். என் தாத்தா ராமசாமிக் கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் 50 வருடங்களுக்கு முன்பாகவே இறந்து விட்டார். என் தாத்தா இறந்த பிறகு என் தாயார் ஏன் பாகம் கேட்டு வழக்குப் போடவில்லை என்றால் எல்லோரும் ஒன்றாக இருந்ததால் வழக்குப் போடவில்லை. என் அம்மா 2001 ம் வருடம் இறந்த பிறகு ஏன் 2014 ம் வருடம் வரை வழக்குப் போடவில்லை என்றால் வழக்குப் போடும் வரை ஒன்றாக இருந்ததால் வழக்குப் போடவில்லை. நாங்கள் ஒன்றாக இருந்தோம் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். என் அம்மா எந்த ஊர் என்றால் அவர் பிறந்தது பரையன்காட்டுவலசு ஆகும். நானும் பரையன்காட்டுவலசில் தான் இருந்து வருகிறேன். எனக்கு அப்பா வழியில் பூமி உள்ளதா என்றால் இல்லை. என் அம்மாவிற்கு எத்தனை சகோதரிகள் என்றால் 2 சகோதரிகள் அவர்கள் பெயர் பெரியபாப்பா, சின்னபாப்பா, ஆகும். அதில் பெரியபாப்பா இறந்து விட்டார். சின்னபாப்பா இருக்கிறார். இந்த வழக்கு தாக்கல் செய்த போது சின்னபாப்பாவை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 2015 ம் வருடம் இந்த வழக்கைத் தாக்கல் செய்த போது சின்ன பாப்பா தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கில் சொத்து விவரம் தவறாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதலில் சொல்லியுள்ள சொத்து விவரம் தவறானது என்று சொல்லி பின்பு சொத்து விவரம் திருத்தப்பட்டுள்ளது என்றால் தவறு இல்லை ஆனால் சொத்து விவரம் திருத்தப்பட்டுள்ளது. முதலில் தாக்கல்செய்த வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரம் சரியானது தானா என்றால் சரியானது தான். முதலில் வழக்கு தாக்கல் செய்த போது 9 முதல் 13 பிரதிவாதிகள் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். எனக்காக அவர்கள் பின்னால் சேர்க்கப்பட்டார்கள் என்றால் அவர்களுக்கும் பங்கு இருப்பதால் சேர்க்கப்பட்டுள்ளார்கள். வழக்குத் தாக்கல் செய்த போது 9 முதல் 13 பிரதிவாதிகளுக்கு பங்கு இருந்த விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். முதலில் வழக்குத் தாக்கல் செய்தபோது யார் யாருக்கு பங்கு இருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரியல்ல. உண்மையில் வழக்குத் தாக்கல் செய்த போது யார் யாருக்கு எவ்வளவு பங்கு உள்ளது என்ற விவரம் தெரிந்திருந்தால் 2015 ம் வருடம் வழக்குத் தாக்கல் செய்த போது 9 முதல் 13 பிரதிவாதிகளை தரப்பினராகச் சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ 1 முதல் 12 வரையிலான ஆவணங்களில் என் தாயார் பெயரோ என் தாயாரின் சகோதரிகளின் பெயரோ இடம் பெறவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா ஆ 1 பட்டாவில் என் தாயார் மற்றும் அவரின் சகோதரிகள் பெயர் இடம் பெறவில்லை என்றால் சரிதான். வா.த.சா ஆ 3 ஆவணத்திலும் என் தாயார் மற்றும் அவரின் சகோதரிகள் பெயரும் இடம் பெறவில்லை என்றால் சரிதான். வா.த.சா ஆ 5,7,9,11 ஆவணங்களிலும்

என் அம்மா பெயரும் அவரின் சகோதரிகள் பெயர் இடம் பெறவில்லை என்றால் சரிதான். என் அப்புச்சி ராமசாமிக் கவுண்டருக்கு எங்கெங்கு என்னென்ன சொத்துக்கள் உள்ளது போன்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு சொத்து இருக்கும் விவரம் தெரிந்திருந்தால் முதலில் தாக்கல் செய்த வழக்குரையில் சொத்து விவரம் தவறாக காட்டியிருக்க மாட்டேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**